# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
# (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
## DEPOSITION OF WITNESS

MCOP.NO. - 248/2022
P.W.1 - லதா
DATE - 27.10.2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

**27.10.2025.**

குறுக்கு விசாரணை– மூன்றாவது எதிரிமனுதாரர் தரப்பில்

விபத்து தேசிய நெடுஞ்சாலையில் நடந்தது. விபத்து நடந்தவுடன் விபத்து நடந்த இடத்தை நான் பார்த்தேன். எனது கணவர் பி.எம்.டபள்யு கார் மோதி தலை, கால் துண்டாகி இறந்துவிட்டார். எனது கணவர் சாலையை குறுக்காக கடக்கும்போது விபத்து நடந்ததா அல்லது நின்று கொண்டிருக்கும்போது நடந்ததா என எனக்கு தெரியாது– எனது கணவர் இருசக்கர வாகனத்தை சாலை விதிகளை பின் பற்றி முறையாக தான் ஓட்டிப்போனர். பி.எம்.டபள்யு கார் மீது தான் தவறு. எனது கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் எனது மகன் தான் அவர் 4 ஆம் மனுதாரர். எனது கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இருக்கிறது– விபத்தில் எனது கணவருடைய ஓட்டுநர் உரிமம் தவறிவிட்டது. எனது கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் விபத்து சமயத்தில் இருந்தது என்றால் இருந்தது. விபத்து நடந்த இடத்தில் சாலையை கடப்பதற்கு நெடுஞசாலையில் அந்த இடத்தில் வழி உள்ளதா என்பது பற்றி

எனக்கு தெரியாது. எனது கணவரின் மாத வருமானத்தை காண்பிக்கும் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை. எனது கணவர் இறந்ததற்கு காரினுடைய காப்பீடுத்தாரர் தான் எனக்கு நஷ்டயீடு கொடுக்க வேண்டும் என்றால் சரி. 3ம் எதிரி மனுதாரர் பொருட்டு வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரி.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 27.10.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN

Additional District Judge(FTC),

Vellore.